**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**இயல்பு கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 27-09-2023-ந் தேதி புதன் கிழமை காலை 10.00 மணிக்கு நகர்மன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திருமதி.பா. கவிதா, M.Com.,**

தலைவர்,

திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 01 | நகராட்சி ஆணையர் அவர்களின் செப்டம்பர்-2023 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br><br>**<u>ந.க.எண்.77/2023/சி1</u>** | **170** | **பதிவு செய்யப்பட்டது** |
| 02 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3088/2022/தூ.இ.தி-1. நாள்.23.02.2023ல் இந்நகராட்சியில் உள்ள MCC. மற்றும் OCC மூலம் உற்பத்தி செய்யப்படும் இயற்கை உரத்தினை ஆய்வு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி MCC. மற்றும் OCC மூலம் உற்பத்தி செய்யப்பட்ட இயற்கை உரத்தினை மதுரை உழவியல் துறை வேளாண்மைக் கல்லுரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பகுப்பாய்வுக்கு அனுப்பட்ட வகையில் மேற்படி நிறுவனத்திடமிருந்து ஒரு கிலோ இயற்கை உரத்தினை பகுப்பாய்வு செய்ய ரூ.3850/- செலுத்த கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி மூலம் அனுப்பப்பட்ட இரண்டு கிலோ இயற்கை உரம் பகுப்பாய்வு செய்த வகையில் மேற்படி நிறுவனத்திற்கு ரூ.7700/- செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **171** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொதுசுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மதுரை உழவியல் துறை வேளான்மைக் கல்லுரரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு, நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையினை மன்றம் எற்கலாம்.<br><u>(ந.க.எண்712/2023/எச்1)</u></td><td></td><td></td></tr>
<tr><td>03</td><td>INDIAN RED CROSS SOCIETY, TIRUVARUR-க்கு இந்நகராட்சி செலுத்த வேண்டிய 2023-24 ஆம் ஆண்டிற்கான சந்தா தொகை ரூ.2500/-ஐ செலுத்த மேற்படி INDIAN RED CROSS SOCIETY மூலம் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சி ஆண்டு சந்தா தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி ஆண்டு சந்தா தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>(ந.க.எண்1886/2022/எச்1)</u></td><td>172</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>04</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் த.நா.50எல்-7339 குப்பை லாரிக்கு தகுதி சன்று பெறுவதற்கு மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து வழங்கும் பணிக்காக 21.08.2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.1.10 (இலட்சம்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><table><tr><td>வ.எண்.</td><td>ஒப்பந்த நிறுவனத்தின் பெயர்</td><td>ஒப்பந்த தொகை ரூ.</td></tr><tr><td>1.</td><td>SIVA ENGINEERING WORKS, 16/11. Singalanthi Road, Thiruthuraipoondi.</td><td>106200/-</td></tr><tr><td>2.</td><td>Ram Kumar Industries, 16/1. Singalanthi Road, Thiruthuraipoondi.</td><td>108914/-</td></tr></table></td><td>173</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள SIVA ENGINEERING WORKS, திருத்துறைப்பூண்டி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண்:1309/2023/எச்1** | | |
| **05** | இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 300 வீடுகளுக்கு ஒரு மஸ்தூர் வீதம், பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், இந்நகராட்சிக் குட்பட்ட பகுதிகளிலுள்ள 7286 வீடுகளுக்கு 25 மஸ்தூர் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் The karan social development foundation மன்னார்குடி என்ற நிறுவனத்தின் மூலம் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இந்நிலையில் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தக்காலம் 31.07.2023 உடன் முடிவடைவதால், பொதுசுகாதாரப் பிரிவின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு மூன்று மாதங்களுக்கு (01.08.2023 முதல் 31.10.2023) அதே விலை விகிதத்தில் ஒப்பந்தத்தினை கால நீட்டிப்பு செய்துகொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** பொதுசுகாதாரப் பிரிவின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட இவ்வலுவலக நடவடிக்கையினை மன்றம் ஏற்கலாம்.<br>(**ந.க.எண்.1818/2020/எச்1**) | **174** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| **06** | திருத்துறைப்பூண்டி நகராட்சி எல்லை வரம்பை பொதுமக்களுடன் இந்நகராட்சிக்கு வந்து செல்லும் மக்களும் அறியும் வண்ணம் திருவாரூர், மன்னார்குடி, முத்துப்பேட்டை, வேதாரண்யம், நாகப்பட்டினம் ஆகிய 5 இடங்களில் SS PIPE PLATE கொண்டு வழிகாட்டும் பலகை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,50,000/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** மேற்காணும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(**ந.க.எண்.2531/2023/இ1**) | **175** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **07** | இந்நகராட்சிக்கு சொந்தமான நகர்மன்ற தலைவர் பயன்பாட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அனுமதிக்கப்பட்டு வாங்கப்பட்ட ஜீப் வாகனத்திற்கு காப்பீட்டு கட்டணம், சாலைவரி, பதிவு கட்டணம் செலுத்தவும் தேவையான உத்தேச செலவினம் ரூ.4,00,000/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** மேற்காணும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(**ந.க.எண். 832 /2022/இ1**) | **176** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **08** | இந்நகராட்சிக்கு சொந்தமான ஆணையர் ஜீப் காப்பீட்டு கட்டணம் ரூ.13250/- நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று புதுப்பிக்கப்பட்டது. மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **177** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு** :<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>(**ந.க.எண்.383/2011/இ1**) | | |
| **09** | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் அரசு ஆணை எண்.GO(4D) No.39 நாள்.14.09.2023 மூலம் இந்நகராட்சி தாதன்குளம் ரூ.39.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்தல், தச்சன்குளம் ரூ.39.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்தல் மற்றும் காந்தி முதலியார் நகரில் ரூ.41.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>**1.** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>(**ந.க.எண்.2180/2023/இ1**) | **178** | **அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது** |
| **10** | சுவட்ச் பாரத் மிஷன்(ஊ) 2.O-ன்கீழ் இந்நகராட்சிக்கு இரண்டு பொது கழிவறை புதிய பேருந்து நிலையம் மற்றும் இராமமடக்குளம் மேற்கரையில் அமையவுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண்.5990/2022/SBM2 நாள்.08.09.2023ன்படி அனுமதிக்கப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>**1.** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>(**ந.க.எண்.2549/2023/இ1**) | **179** | **அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது** |
| **11** | இந்நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பேருந்து நிலையம் அமைக்கப்பட உள்ளதால் பேருந்து நிலைய கட்டுமான பணி நிறைவடையும் வரை தற்காலிகமாக பேருந்து நிலையம் அமைப்பதற்கு, பேருந்து நிலையத்திற்குள் பேருந்து நுழையும் பகுதியின் வடபுறம் 90 மீட்டர் நீளத்திற்கும், தென்புறம் 60 மீட்டர் நீளத்திற்கும் சாலைகள் இரண்டு புறமும் சுமார் 5.00 மீட்டர் அகலத்திற்கு தார்சாலையாக அமைக்கும் பணிக்கும், | **180** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | தற்காலிக நிழற்குடை அமைக்கும் பணிக்கும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதையும், மற்றும் மேற்காணும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(**ந.க.எண்.2530/2023/இ1**) | | |
| **12** | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.16701/2023/ஜி.ஆர்2.நாள்.12.09.2023ல் சென்னை உயர்நீதி மன்றத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோர்களை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ள வழக்குகளில் தீர்ப்புரை வரபெற்று மேல்முறையீடு செய்யவேண்டிய வழக்குகளில், உடன் மேல்முறையீடு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதால், இந்நகராட்சி தொடர்புடைய மேற்படி அலுவலர்களை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ள சென்னை உயர் நீதிமன்ற வழக்கு எண்.32885/2022ல் மேல்முறையீடு செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.20,000க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>(**ந.க.எண்.3371/2023/சி1**) | **181** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

ஒம்/பா.கவிதா,
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

/உண்மை நகல்/